# சைவ சமயம்

**முனைவர் எ.பச்சையப்பன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 600 030.
Email: *pariyambadi[at]gmail.com*

உலக மக்கள் காலந்தோறும் உயர் நிலையை - ஓர் உன்னத நிலையை அடைவதற்குச் சான்றோர் பெருமக்கள் ஆண்டாண்டு காலமாகத் தம் பட்டறிவாலும் படிப்பறிவாலும் பெற்ற அனுபவத்தைக்கொண்டு சிறந்ததொரு வாழ்க்கைக் கொள்கைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். உலகின் ஒவ்வொரு இடத்திலும் யாரேனும் ஒரு சான்றோரின் கொள்கைகளைப் பின்பற்றி மக்கள் தம் வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மக்கள் தம் வாழ்க்கைப் பயணத்தில் மேற்கொள்ளும் வாழ்க்கைக் கொள்கைகளையே சமயம் எனலாம். தமக்கான வாழ்க்கைக் கொள்கைகளை வகுத்த சான்றோர்களையே தம் கடவுளாக மக்கள் வழிபட்டு வருவதையும் அறியமுடிகிறது. இவ்வாறு உலகின் பல்வேறு இடங்களிலும் காலந்தோறும் பல்வேறு சமயங்கள் தோன்றின. அவற்றுள் சில காலத்தைவென்று இன்றளவும் மக்களால் பின்பற்றப்பட்டு வருவதையும் அறியலாம். இந்து, கிறித்தவம், இசுலாமியம், பௌத்தம், சமணம் என்பன போன்றவற்றைச் சான்றாகக் கொள்ளலாம். இந்து சமயத்திலே சைவம், வைணவம் என்ற இருபெரும் பிரிவுகள் மக்களால் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் சைவ சமயததைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

சைவ சமயம், இந்து சமயம், சமய நம்பிக்கைகள், வாழ்க்கைக் கொள்கைகள், ஆன்மிக மரபுகள்

**சைவம்**

சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சமயம் சைவ சமயமாகும். சிவ வழிபாடானது, பழங்காலத்திலிருந்தே இந்தியாவில் நிலவிவந்திருக்கிறது. சைவ சமயமானது அன்றுமுதல் இன்றுவரை வழிபாடு மட்டும் செய்கின்ற ஒரு சமயம் என்றில்லாமல், மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் செம்மைப்படுத்திய ஒரு வாழ்க்கை நெறியாக இருந்து வந்திருக்கிறது. புலால் உண்ணாமைக்குச் சைவம் என வழங்குவதும், எவ்வுயிருக்கும் அன்பு செய்பவனே சைவன் எனக் குறிப்பிடப்படுவதும் இச்சமயம் பற்றிய சிறந்த கருத்துக்களாக அமைகின்றன.

“சைவ சமயம் அனாதியாக இருந்து பல பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. சைவப் பெருஞ்சமயத்தின் அகச் சமயங்களாகப் **பாடாணவாதம், பேதவாதம், சிவ சம வாதம், சிவ சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகார வாதம், சிவாத்து விதம்** என்ற ஆறும்; அகப்புறச் சமயங்களான **பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம்** என்ற ஆறும் பண்டைச் சமய நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. இவை ஆராய்ச்சியில் மட்டிலும் உள்ளனவேயன்றி, இவற்றுள் ஒன்றேனும் அனுட்டானத்தில் இல்லை. அனுட்டானத்தில் இருப்பது சைவ சித்தாந்தம் ஒன்றே; இதை ஒட்டியே தமிழ்நாட்டில் உள்ள பல்லாயிரம் சிவாலயங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் விழாக்களும் இன்றுவரை அமைந்துள்ளன” என்று மு.அருணாசலம் கூறுவதன் வழி, சைவசமயம் பலபிரிவுகளைக் கொண்டிருந்தாலும் காலத்தை வென்று இன்றுவரையிலும் மக்களின்வாழ்க்கையோடு இணைந்து, பயன்பாட்டில் இருந்துவருவது சைவசித்தாந்தம் என்பதொன்றே என்பதை அறியமுடிகிறது. இயற்கையை முழுமையாக அதன் அனைத்துக் கூறுகளையும் இணைத்து உணர்ந்தபோது பூரணப் பொருளாக வெளியும், அதன் இயக்க ஆற்றலாக விண் என்னும் ஆகாசமும்தான் பேரியக்க மண்டலமாகச் சிறப்புற்று விளங்குகின்றது என்ற உண்மையை மக்கள் உணர்ந்தனர். பூரணப் பொருளைச் சிவமென்று கூறி அதையே முழு முதற்பொருளாகக் கொண்டு போற்றி வழிபடப்பட்டது. அந்தப் பெருமை வாய்ந்த சிவநிலையைக் கொண்டு சிந்திக்கும் அளவிலே உயிர்கள் அனைத்தும், மக்கள் அவனை நினைத்து வணங்கி வந்தவர்கள் என்ற உணர்வைப் பரப்பி துன்பம் தவிர்த்து நலம் விளைத்து, நலம் காத்து வாழும் வாழ்க்கைநெறி வகுக்கப்பட்டது. சிவனைத் தெய்வமாகக் கொண்டு வாழும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறியே சைவ சமயம் ஆயிற்று. சைவம் என்பது நன்மை, செம்மை அல்லது மங்கலம் என்ற பொருட்களைக் கொண்டது. சைவ சமயம் என்றால் செம்மையான நெறி என்று பொருள்.

அனைத்து உயிர்களையும் பக்குவப்படுத்தி, சிவமாம் தன்மையைப் பெறச் செய்வதே சைவ சமயத்தின் குறிக்கோள் ஆகும்.
“பரவெளியிலிருந்து விண் முதலாகப் பஞ்சபூதங்கள் தோன்றின. பஞ்சபூதங்களின் கூட்டாக உண்டானவையே மற்ற அனைத்தும்; மனிதனும் அவ்வாறே” ஆகையால் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும் ஒழுக்கமாக வாழவேண்டும் என்றபோது அந்தத் தெளிவோடு வாழும் நெறியைச் சைவ சமயம் என்றார்கள். “சைவம் என்றால் சிவமே அனைத்துமாகி உள்ளது என்ற நேர்நிறை உணர்வு. பேரியக்க மண்டலத்தையே தெய்வத்தின் வடிவமாக உணரும் பேரறிவு. அந்தப் பொருளை உணர்ந்து கொண்டால், அதன் பரிணாமப்படிகளில் ஒன்றுதான் மனித இனம் என்ற உணர்வு. எல்லோரும் சமம் என்பது இவையனைத்தும் அந்தத் தெளிவில்தான் விளங்கும்.” இது சைவம் குறித்து வேதாத்திரியம் கூறும் கருத்து ஆகும்.

இன்றைய உலகில் சுமார் 452.2 மில்லியன் சைவர்கள் காணப்படுவதாக, மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு குறிப்பிடுகிறது (The World’s Religions in Figures: An Introduction to International Religious Demography, pp.1-27).

**தொன்மை**

சைவத்தின் காலத்தை வரையறுப்பது கடினமானதாகவே உள்ளது. உடலில் சாம்பலைப் பூசிக்கொள்ளுதல் (விபூதி), கற்களை (இலிங்கம்) வழிபடல், விலங்காடை புனைதல் (இன்றைய அகோரிகளிடம் தொடர்வது) என்று பழங்குடிப் பண்புகள் பலவற்றை இன்றும் சைவத்தில் காணமுடிவதிலிருந்து, அதன் தொன்மையை ஊகித்துக் கொள்ளமுடியும்.

சிந்து நாகரிகம் (பொ.மு 2500-2000) நிலவிய மொகஞ்சதாரோ ஹரப்பா மற்றும் வடமேற்கு இந்தியாவின் தொல்லியல் பகுதிகளில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு, அங்கெல்லாம் சைவம் நிலவியிருக்கலாம் எனும் ஒரு கருதுகோள் உண்டு (Flood, P.24). இதற்கு ஆதாரமாக, அங்குக் கிடைத்த சான்றுகளுள், "முந்துசிவன்" என ஆய்வாளர் கூறும் பசுபதி முத்திரையும் (Flood,pp.28-29). இலிங்கத்தையொத்த கற்களும் சுட்டிக்காட்டப் படுகின்றன.

சைவத்தின் தோற்றுவாயை அறிதற்கு இந்தியா - இந்து மதம் என்ற பெயர்களுக்கும் முற்பட்ட காலத்துக்குச் செல்ல வேண்டும் என்றும், இந்திய நாட்டிற்கு இந்தியா என்ற பெயர் வந்த கதையே வினோதமானது என்றும் குறிப்பிடுகிறார் மு.அருணாசலம். வடமேற்கிலிருந்து வந்தவர்கள், சிந்து நதிக்குக் கிழக்கே வாழ்ந்த மக்கள் எல்லாம் சிந்துக்கள் என்று பெயரிட்டார்கள். நாளடைவில் இது ஹிந்து என்றாயிற்று; இவர்கள் மதம் ஹிந்து மதம் ஆயிற்று; இவர்கள் வாழ்ந்த நாடு இந்திய நாடு. இப்படியாக இப்பெயர்கள் எல்லாம் அன்னியர் வைத்த பெயர்களே. இவர்கள் புதிதாய் ஹிந்து மதம் என்று பெயரிட்டது, இவர்கள் வருமுன்னமே இந்நாட்டில் நிலவிய தெய்வக் கொள்கைக்கே. வடமொழி இந்தியாவுக்கு வருமுன்னமே தமிழ் மக்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்து வந்தார்கள். இயற்கையில் நிலம் அமைந்திருந்த முறையை ஒட்டி ஆங்காங்கு வாழ்ந்த மக்களையும் அவர்களுடைய ஒழுக்கத்தையும் அந்தந்தப் பகுதிகளுக்குரிய தெய்வத்தையும் ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் உள்ளிட்ட தமிழ்ப்பனுவல்கள்வழி அறியலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளுக்கும் முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகியோரைத் தெய்வங்களாகக் கொண்டனர் பண்டைத் தமிழர்.

சிந்துவெளியில் அகழ்ந்து புதைபொருளை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இந்நாட்டில் பரவியிருந்த புராதன நாகரிகத்தில் இலிங்க வழிபாடும், சிவபெருமானுடைய வாகனமாகிய இடபமும் இருந்தமை தெரிய வருகிறது என்கிறார்கள். இச்செய்திகள், இந்திய நாட்டின் புராதன சமயம் சைவ சமயமே, பெயர் தெரியாமையால் இதற்குப் பிற்காலத்தில் இந்து சமயம் என்று அன்னியர் பெயர் வைத்தார்கள் என்ற கொள்கைக்கு ஆதரவு தருகின்றன.

தமிழ்நாட்டில் பழங்காலம் தொடங்கி நிலவிய சமயம் சைவ சமயமே, பிற யாவும் பிற்காலத்தில் இணைந்தவை என்ற கருத்தைத் தெளிவாக உணர்வதற்கு இரண்டு சான்றுகளைக் குறிப்பிடுவர்.

ஒன்று, தமிழ்நாட்டில் அன்றும் இன்றும் உள்ள பல்லாயிரக்கணக்கான கோயில்கள் சிவன் கோயில்களே. பிற சமயக் கோயில்கள் மிகச் சிலவே. எனவே, நாட்டில் பழைய பொதுச் சமயம் சைவம் என்பது தெளிவு எனலாம். மேலும், இந்நாட்டில், சைவம் ஒரு சமயமே பிற


Paper ID: SR26905193755 DOI: https://dx.doi.org/10.21275/SR26905193755

சமயத்தினரைத் தன் கூட்டத்துள் சேர்க்க முயலாதது. காரணம், ஆதி காலத்தில் நாட்டிலிருந்த சமயம் சைவம் ஒன்றுதான். ஆகவே, பிறர் என்ற சொல்லுக்கு அங்கு இடமில்லை. சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் சைனமும், பௌத்தமும் தோன்றின. இச்சமயங்கள் புதிதாக உண்டாகி வளர்ந்தபோது, இவற்றுள் சென்று சேர்ந்தவர்கள், சைவத்திலிருந்து சேர்ந்தவர்களே என்பர்.

மற்றொன்று, சங்க நூல்களில் காணும் மதுரை வெள்ளியம்பலத்தைப் பற்றிய குறிப்பு அதன் பழமையை உணர்த்தும். அதற்கு முன்னதாகத் தில்லைப் பொன்னம்பலம் இருந்ததனால்தான் வெள்ளியம்பலம் புதியதாக ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல், **கோச்செங்கட் சோழர்** எழுபத்தெட்டு மாடக் கோயில்கள் கட்டினார் என்கிறார் அப்பர் சுவாமிகள். திருமங்கையாழ்வார் இச்சோழர் கட்டிய திருநறையூர் மணிமாடம் என்ற திருமால் ஆலயத்தைக் குறிப்பிடும்போது, அவர் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்கள் கட்டினார் என்பதைக் குறிப்பிடுகிறார்.

**“இருக்கு இலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு**
**எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட**
**திருக்குலத்து வளச் சோழன் செய்தகோயில்**
**திருநறையூர் மணிமாடம் சேர் மின்களே“**

என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். இக்கோயில்கள் யானை புகமுடியாத அமைப்புடையன. என்றாலும், அனைத்தும் பெருங்கோயில்கள். இச்சோழ மன்னருடைய வரலாறு சங்கநூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர் பொ.பி.இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்; அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் இவர் போற்றப்பெற்றுள்ளார். இவர் கட்டியவை கற்கோயில்கள்; அவற்றுக்குமுன் இருந்தவை செங்கற்கோயில்கள். அவற்றுக்குமுன் மண்ணால் கட்டிய கோயில்களும் மரத்தால் கட்டிய கோயில்களும் இருந்தன என்றால் சைவக் கோயில்கள் எவ்வளவு பழமையானவை என்பதை யூகிக்க முடியும். இதன்வழி, இந்தியாவின் ஆதிச்சமயமாகவும், தாய்ச்சமயமாகவும் விளங்குவது சைவமே என்பதை உணரலாம்.

## சைவ சமய ஆய்வு நூல்கள்

இந்து சமய விளக்கமாகப் பல நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்துப் பெரியார் எழுதிய சைவ சமயம் என்ற ஆங்கில நூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. கதிரேசு என்பார் எழுதிய ஆங்கில நூல் சென்னையில் வெளியாயிற்று. மேலையூர் சுவாமிகள் எழுதிய சைவ சமய அறிமுகம் கடந்த நூற்றாண்டில் வெளியாயிற்று. அதே நூற்றாண்டில் வெளிவந்த மு.அருணாசலம் அவர்களின் சைவ சமயம் என்ற நூலும், டாக்டர் மா.இராசமாணிக்கனார் அவர்களின் சைவ சமய வளர்ச்சி என்ற ஆய்வு நூலும் குறிப்பிடத்தக்கன ஆகும்.

## சமயமும் பயனும்

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் சமயக் கொள்கைகளைச் சான்றோர்கள் வகுத்துக்கொடுத்திருக்கிறார்கள் என்றாலும் இன்றைக்குத் தாங்கள் பின்பற்றும் சமயச் செயல்பாடுகளால் அவர்கள் எந்த அளவிற்குப் பயன் அடைகிறார்கள் என்பதை உற்று நோக்க வேண்டும். வாழ்க்கை பற்றிய சாரம்சத்தையும் தெளிவையும் சான்றோர்களின் போதனைகளின் வழி அறிந்தாலும் ஒவ்வொருவரும் தன் உள்ளுணர்வால் தன்னைப் பற்றியும் தன்னைச் சூழ்ந்த நிலை பற்றியும் தெளிய வேண்டும். தன் தெளிவிற்குச் சான்றோர்களின் போதனைகள் பயன்படும்; சான்றோர்களின் போதனைகளை படித்திவிட்டால் மட்டுமே தனக்கு அத்தனை பலன்களும் வந்துவிடும் என்று எண்ணலாகாது என்பதை தெளிதல் அவசியம். தன் தெளிவிற்கு நூல்கள் பன்படும் என்றாலும் அதைவிட மிகுபலன் அளிக்கக்கூடியது இறைநிலையை உணர்ந்த உண்மையாசானின் போதனைகளை நேரடியாகக் கேட்பதாகும்.

## சைவ சமய கோட்பாடுகள்

சைவ சமய நூல்கள் உருவ வழிபாடு என்பதோடல்லாமல் அந்த உருவ தோற்றத்திற்கெல்லாம் மூலமாக நிற்கும் அருவ நிலையையும் உணர்த்துவனவாகும். குறிப்பாக, திருமூலரின் திருமந்திரம் மனிதரின் மூன்றாவதுகண் (அறிவுக்கண்) எனத்தகும் சிறப்புடையதாக அமைகிறது.

சைவ சமயக் கோட்பாடுகள் சைவ சித்தாந்தம் என வழங்கப்பெறும். சித்தாந்தம் என்பது, இதுவே சமயம் அனைத்தினும் முடிந்த முடிவு என்பதைப் புலப்படுத்தும். சைவ சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று ஒருவரும் இல்லை. அது ஆதிகாலத்திலிருந்து வழங்கப்பட்டதாகவே வருகிறது. சங்கரருடைய அத்வைதம்,

இராமானுசருடைய விசிஷ்டாத்வைதம், மத்வருடைய துவைதம் என்று சொல்வதுபோல, சைவ சமய முடிவாகிய சுத்தாத்வைதத்தை ஓர் ஆசாரியர் பெயரைச் சார்த்தி வழங்கும் வழக்கம் இல்லை. ஏற்கனவே நாட்டிலும் நாயன்மார் பாடல்களிலும் வழங்கிவந்த கருத்துக்களைத் தொகுத்துப் பின்வந்த மெய்கண்டார் சைவசமய இலக்கணத்தை எழுதினார். திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ள கருத்துக்கள், நாயன்மார்கள் வெளிப்படுத்தியுள்ள செய்திகள், சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்ற செய்திகள் என்பன சைவ சமய கோட்பாடுகளாகச் சைவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கியக் கோட்பாடுகளாவன:

- அன்பே சிவம்
- ஒன்றே குலம் ஒருவனே தேவன்
- மக்கள் தொண்டே மகேசன் தொண்டு
- இறைவன் என்பவர் அனைத்திற்கும் மேலானவர்; அனைவருக்கும் பொதுவானவர்
- அண்டவெளியில் உள்ள இறையாற்றல் மனித உடலுக்குள்ளும் இருக்கிறது.
- தேனுக்குள் இன்பம் நிறைந்திருப்பதைப்போல உடலுக்குள் இறைவன் ஒளிந்திருக்கிறான்.
- நமது ஐம்புலன்களை அடக்காமல், அதற்கு உரியன கொடுத்து முறைப்படுத்தினால், அவை நமக்கு நன்மையையே செய்துகொண்டிருக்கும்
- பதி, பசு, பாசம் என்ற நிலையில் பதியாகிய இறைவனை பசுவாகிய மனிதர்கள் அடைதற்குப் பாசம் என்பது தடையாக உள்ளது; அந்தப் பாசத்தைக் கடந்து மனிதர்கள் இறைநிலையை அடைதல் வேண்டும்.

**முப்பொருள்: பதி, பசு, பாசம்**

முப்பொருள்களாவன தான் (பசு), உலகம் (பாசம்), பரம்பொருள் (பதி) என்பனவாகும். தான் - நான் என்பது உயிர், ஆன்மா, ஆவி, ஜீவன், ஜீவாத்மா என்று பலபெயர்களில் வழங்கப்பெறுகிறது. சைவத்தில் பரம்பொருளைப் பதி என்று குறிப்பிடுவர். உடலோடு கூடிய உயிரானது தன் அனுபவத்திற்கு உரியதாகவும், புலன்களால் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியப்படுவதாய் உள்ள வெளி உலகமே பாசத்திற்கிடமாய் அமைகிறது. ஆன்மாவிற்கும், உலகப்பொருள்களுக்கும் அப்பால் உள்ளதாகிய பொருளே பரம்பொருள். இது பரமாத்மா, பிரமம், பதி, கடவுள், இறைவன் என்றெல்லாம் சொல்லப்பெறுகிறது. எல்லாச் சமயங்களிலும் ஆராய்ச்சிக்குரிய பொருள் மேற்சொன்ன மூன்றே ஆகும்.

பாசம் என்பது மூவகைப்படும் (மும்மலங்கள்). அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். இந்தப் பாசம் என்பது கட்டு, தளை, பந்தம், மலம் என்றும் வழங்கப்பெறும்.

**ஆணவம்:** ஆணவத்துக்கு இருள் என்று ஒரு பெயருண்டு. பூத இருளானது புறப்பொருளைக் காட்டாது மறைக்கும். ஆனவ இருளில் அழுந்திக் கிடக்கின்ற ஆன்மா நாம் இருளில் அழுந்தியிருக்கின்றோமென்று உணரமுடிவதில்லை. இவ்விருள் அளவில்லாத சக்தியுடையது. செம்பிலே பொருந்திய களிம்புபோல அனாதியாக உள்ளது. இது அழிவில்லாத மூல மலம். ஆன்மாவினுடைய இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற மூன்றையும் முழுதும் மறைப்பது. ஆணவ மலமென்பது ஆன்மாவின் தன்மையன்று, அதனிடத்து ஏற்பட்ட அழுக்கு ஆகும்.

**கன்மம்:** இரண்டாவதான மலம் கன்மம். கன்மம் என்பது வினை ஆகும். இது நல்வினை, தீவினை எனப்படும். கன்மமே பிறவிக்குக் காரணம். எல்லா உயிர்களும் ஒரே விதமான பிறவி எடுப்பதில்லை. பிறவியின் தன்மையும் ஆற்றலும் அதில் விளங்கும் அறிவும் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. இதற்குக் காரணம் மூல கன்மம் என்று சொல்லப்படும். கேவல நிலையில் ஆணவத்தில் அழுந்திக் கிடந்த உயிர்களுக்கு ஆணவத் தொடர்பில் வன்மையும் மென்மையும் உண்டு. இவ்வாறே திருவருள் தொடர்பிலும் உயர்வு குறைவு உண்டு. இவற்றால் உடலெடுக்குமுன் உயிருக்கு அடிப்படையாகவே நல்வினை தீவினைகள் பொருந்துகின்றன. இந்தக் கன்மமானது வித்தும் முளையும்போல நாசத்தையும் தோற்றத்தையும் உண்டாக்குவது. ஆன்மாக்கள் தோறும் கன்மமானது சூட்சுமமாய் உள்ளது. கன்மம் என்பது மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் விளையும். உயிர்கள்தோறும் இது இன்ப துன்பங்கள் விளைவதற்குக் காரணமாகிய புண்ணிய பாவங்களாகப் பொருந்தும். இந்தக் கன்மத்தைச் சஞ்சித கன்மம், பிராரத்த கன்மம், ஆகாமிய கன்மம் என்று மூன்றாகப் பாகுபடுத்திச் சொல்லியிருக்கிறார்கள் சான்றோர்கள்.

**மாயை:** மூன்றாவதாகச் சொல்லப்படும் மலம் மாயை என்பது. மாயா என்ற சொல்லுக்குத் தோன்றி ஒடுங்குவதற்கு இடமாயுள்ளது என்று

பொருள். மாயை எல்லாக் காரியங்களும் தன்னிடத்தில் ஒடுங்கவும், தன்னிடத்தில் தோன்றவும் காரணமாக இருப்பதால் இது மாயை எனப்படும் (மா - ஒடுங்குதல், யா - தோன்றுதல்). ஆன்மாக்கள் வினைகளின் பயனை அருந்தி இருவினைகளுக்கும் ஒப்பு ஏற்படுத்துவதற்காக இறைவன் தன் பரந்த கருணையினால் மாயையிலிருந்து **தனுகரணபுவன போகங்களைப்** படைத்தான். தனு - உடம்பு; கரணம் - அனுபவிப்பதற்குரிய கருவிகள்; புவனம் - உலகம்; போகம் - அனுபவிப்பதற்குரிய கருவிகள். இவை மாயையின் காரியம் எனப்படும். மாயை சைவ சித்தாந்தத்தில் மூன்று விதமாகச் சொல்லப்படும். இவை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை எனப்படும்.

## ஐந்தொழில்கள்

மூவகை மலத்தாலும் தொடக்குண்டு கிடக்கும் ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து விடுவித்துப் பேரின்ப வாழ்வு அளிக்க வேண்டுமென்ற பெருங்கருணை இறைவனுக்கு உண்டு. இக்கருணை வெளிப்பாட்டை விளையாட்டு அல்லது லீலை என்பார்கள். இக்கருணையின் செயல்களை ஐந்தாகச் சொல்வது மரபு. அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். இவற்றைச் சிவபெருமானின் ஐந்தொழில் என்று சைவம் கூறும்.

1) **படைத்தல்**: படைத்தல் - தோற்றுவித்தல். இறைவன் மாயையை முதற் காரணமாகவும் தான் நிமித்த காரணமாகவும் இருந்து உலகைப் படைக்கிறான் என்பர். இது பானை செய்யும் குயவன் மண்ணை முதற் காரணமாக வைத்து, சக்கரமும் கோலும் துணைக் காரணமாய்க் கொண்டு, தான் நிமித்த காரணமாயிருந்து பானை வனைவதுபோல. படைப்பு எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருப்பது; இதற்கு முடிவில்லை. உலகத்துப் பொருள்கள் அனைத்தும் ஒரு காலத்தில் உண்டாகிச் சிறிது காலம் இருந்து பின் அழியும் தன்மை உடையன. உயிர்கள் வாழ்வதற்கு இடமாயுள்ளது உலகம். படைப்பின் முடிவான நோக்கம் மும்மல நீக்கமே ஆகும்.

2) **காத்தல்**: காத்தல் என்பது உயிர்களையும் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சங்களையும் அவ்வவற்றுக்குரிய கால எல்லை வரையில் நிலை பெறுமாறு காத்து, உயிர் வினைப்பயனை அனுபவிக்கத் துணை செய்தலாகும். உலகைப் படைத்த இறைவன் உயிர்களுக்குப் பல வகையான உடல்களைத் தருகிறான். உடல்களும் வாழ்நாளும் பெற்று வாழும் உயிர்கள் வினை செய்கின்றன. வினை பிறவியைத் தருகிறது. பிறவியில் ஊசலாடும் உயிர், வினைக்கு ஏற்ப அறிவு விளக்கம் பெறுகிறது. இவ்வாறு அனுபவித்தற்குப் பொருளாக உலகையும் கருவிகளாக உடல் முதலியவற்றையும் தந்து நிலைபெறச் செய்தலே காத்தல் என்பதாகும்.

3) **அழித்தல்**: உயிர்களுக்கும் பாசங்களுக்கும் அழிவு என்பது இல்லை. ஆகவே, இங்கு அழித்தலின் பொருள் இளைப்பாற்றுதல் என்று சாத்திரம் கூறும். பிறப்பினிலும் இறப்பினிலும் பட்டுச் சுழன்று களைத்த உயிருக்குச் சில காலம் இளைப்பாறச் செய்வதே அழித்தல் என்பதாகும். இதன்நோக்கம், மீண்டும் படைப்புக் காலத்தில் அவ்வுயிர் இளைப்பு நீங்கித் தனுகரண புவன போகங்களுடன் கூடி வினைப்பயனை அனுபவித்துத் தீர்ப்பதற்கு வேண்டிய வலிமையைத் தருவதாகும்.

4) **மறைத்தல்**: இதை திரோபவம் என்பர். மறைத்தலால் உயிர் வினையில் ஈடுபட்டு அனுபவிப்பதால் கால ஓட்டத்தில் இருவினையொப்பு நிகழ்கிறது. இது மல முதிர்ச்சிக்கு உதவியாகிறது.

5) **அருளல்**: இதை அனுக்கிரகம் என்றும் வழங்குவர். இருவினை ஒப்பு நிகழ்ந்து மலம் நீக்கப்பட்ட அளவில் அனுக்கிரகம் நிகழ்கிறது. இதை அருட்சத்தி பதிதல் - சத்தி நிபாதம் என்பார்கள். பாசங்கள் யாவும் விடவே, முத்திப்பேறு கைகூடும்.

இறைவன் சந்நிதியில் எப்போதும் இந்த ஐந்தொழில் இடையறாது பல படிகளில் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். சூரியனுடைய சந்நிதியிலே சில மலர்கள் மொட்டாகியும், சில மொட்டு விரிந்தும், சில நன்கு மலர்ந்தும், சில கூம்பியும், சில உதிர்ந்தும் போவது போல, இறைவன் சந்நிதியில் இவ்வைந்தொழில்கள் உயிரின் பக்குவத்திற்கேற்ப நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

## சிவம் - சக்தி

சிவம் என்ற பொருள் ஒன்றே. சிவத்தின் ஆற்றலைத் தனியே பிரித்துச் சத்தி என்று வழங்குவர். சத்தி என்பதே தற்காலப் பயன்பாட்டில் சக்தி என்று வழங்கப்பெறுகிறது. சிவத்தையன்றித் தனியே சக்தி என்பது இல்லை. சக்தியின் செயற்படுதன்மையை வைத்துச் சக்தி பலவாகச் சொல்லப்படும்.

## தசகாரியம்

தசகாரியம் என்ற ஒரு தொடர் சித்தாந்தத்தில் சொல்லப்பெறும்; ஆன்மா உலகின் இயல்பைக் கண்டு, பின் உயிரின் இயல்பைக் கண்டு, பின் சிவத்தின் இயல்பு கண்டு, இறுதியில் சிவத்தோடு ஒன்றும் நிலை வரையில் பெறும் அனுபவ முறைகளைப் பத்துப்படிகளாக வகுத்துக் கூறுவது ஒரு மரபு.

**முத்திநிலை**

சைவ சித்தாந்தத்தின் முக்கியமான கோட்பாடு முப்பொருள் உண்மை என்பது. இதன்படி, பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களும் நித்தியமானவை. ஆன்மாக்களுக்கு அழிவு இல்லை. சில சமயம், ஆன்மா பாசங்களிலிருந்து விடுபட்டபின்னும், சிவத்தோடு பூரணமாய் ஒன்றாவதில்லை. பிறப்பிலிருந்தும் இறப்பிலிருந்தும் - வினையின் தொடக்கத்திலிருந்து விடுபட்டது உண்மை. விடுபட்ட ஆன்மா, இறைவனொடு இரண்டறக் கலந்து அவனது ஐந்தொழில்களில் சம்பந்தமின்றி, அவன் பேரின்பம் அளிக்கத் தான் அவ்வின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பன். இதுவே இரண்டறக் கலத்தலின் உண்மைப் பொருள் என்று சித்தாந்திகள் கூறுவர்.

**முக்தி சாதனம்**

ஒரு கதையின்வழி முக்தி சாதனம் என்பதை உணரலாம். ஓர் அரசனுடைய மகன் இளமையில் ஏதோ ஒரு காரணத்தினால் அரண்மனையை விட்டு வேடர் கூட்டத்திலே சேர்ந்து வேடரால் வளர்க்கப்பட்டான். தான் இன்ன சிறப்புடையவன் என்பது அவனுக்குத் தெரியவில்லை. வேடனென்றே தன்னை நினைத்து இருக்கிறான். அந்த நிலையில் அரசன் வந்து, “நீ என்னுடைய மகன்” என்று அவனுக்கு உணர்த்தி வேடர் கூட்டத்திலிருந்து பிரித்துச் சிறப்புச் செய்து தன்னைப்போல அரசகுமாரனாக்கினான். அதுபோல, உயிரானது தன்னையும் அறியாது. தன் தலைவனையும் அறியாது, ஐம்புல வேடர் சுழலிற்பட்டுத் துயருறுகின்றது. அப்போது தலைவன், தன் அருள் காரணமாக அவனுக்கு ஒரு குருவாக எழுந்தருளி வந்து, புலன்கள் முதலான தத்துவங்கள் நீயல்ல என்று அவனுக்கு உயர்த்தி, அவற்றை உள்ளபடி உணரச்செய்து, அவற்றினின்றும் பிரித்து, அவனுடைய அறியாமையைப்போக்கி, அவனைத் தானாக்கித் தன் திருவடியில் சேர்க்கிறான். குருவடிவாக வருகிற இறைவன் தன் அருளால் அவ்வான்மாவைத் தூய்மையாக்குகிறான். இருவினை ஒப்பு நிகழ்ந்து, மலங்கள் அகன்று, அவ்வான்மாவிடம் திருவருள் பதிகிறது. பதிந்த உயிர் பரமுத்தியில் சேர்கிறது. திருவருள் நெறியில் நின்று சிவத்தைக் கூட விரும்புவோர் பின்பற்றத்தக்க வாழ்க்கை நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும்.

**திருவருள்**

சைவ சமயத்தில் இறைவனின் திருவருள் என்ற கருத்து மிக்க சிறப்பான இடம் வகிக்கிறது. திருவருள் என்பது உயிர்கள் உய்ய வேண்டும் என்று இறைவன் கொண்ட பெருங்கருணை ஆகும். இதன்காரணமாகவே இறைவன் உயிர்கள் களைப்படைந்த காலத்தே ஒடுங்கச் செய்து, மீண்டும் வினைக்கேற்பப் பிறவியைத் தந்து, மாயையிலிருந்து தனுகரண புவன போகங்களைத் தோற்றுவித்து வினையருந்தச் செய்கிறான். உயிர்கள் வினையை அனுபவித்து முடிக்க வேண்டும், ஆணவ மாபந்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

**மானுட வாழ்நிலை**

பாற்கடலில் வாழும் மீன் அப்பாலை உண்ண எண்ணாமல், கடலில் உள்ள பிற சிற்றுயிர்களான பூச்சி, முதலியவற்றை உண்டுவாழ முயல்கிறது. அதுபோல, உயிர்கள் தம்மையும் அறியாமல், தலைவனையும் அறியாமல் உலகப் பொருள்களில் பற்றுவைத்து உழல்கின்றன. இவ்வுழற்சியிலிருந்து மீளச் செய்வதே உடல் கொடுத்ததன் நோக்கம். அழுக்குத் துணியில் சாணம், உவர்மண் முதலியவற்றைப்போட்டு நனைத்து, தோற்றத்தில் பின்னும் அழுக்காக்கி, பிறகு அவற்றைத் துவைத்துச் சுத்தமாக்குவதுபோல, இறைவனும் உயிர்களை உலகப்பொருள்களிலே தோயச் செய்கிறான். கன்ம வலியால் இன்பம் வரும்போது எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்; துன்பம் ஏற்படும்போது வருந்தி இறைவனைக் கண்ணில்லாதவன் என்றுகூட மக்கள் குறை கூறுகிறார்கள். ஆனால், வைத்தியன், புண் உடையவனுக்கு வலி உண்டான போதிலும்கூட, கத்தியால் புண்ணை அறுத்துப் பிறகு அதை ஆற்றுகிறான். துன்பங்களும் இத்தகையனவே.

பெற்றோர்கள் பெற்ற பிள்ளைகள் தாம் சொல்லுகின்ற நல்வழியில் சில சமயம் நடக்காதபோது கோபம் கொண்டு பிரம்பால் அடித்துக் கடுமையான தண்டனையும் கொடுப்பார்கள். இவ்வளவும் பிள்ளைகளின்மேல் உள்ள பாசத்தால் அல்லவா! அதுபோலவே இறைவன் சிலரிடத்துக் கோபித்து அருள் செய்வதற்குப் பதிலாகத் துன்பமே தருவதுபோலத்


Paper ID: SR26905193755 DOI: https://dx.doi.org/10.21275/SR26905193755

தோன்றுவதும். இதுவும் அவரவருடைய தீவினையை அனுபவித்துக் கழிய வேண்டும் என்ற கருணையினால் நிகழ்வதேயாகும். இவ்வாறு இறைவன் உயிர்களுக்கு இன்பமும் துன்பமும் தருவது வினையை அனுபவித்துத் தீர்ப்பதற்காகவே. ஆதலால் நமக்குத் துன்பம் வருங்காலத்து அதை ஆற்றியிருந்து நேர்வழியில் மனம், மொழி, செயல் ஆகியவற்றைச் செலுத்தி வாழ்தலே நலம் பயப்பதாகும்.

யாருக்கு எப்போது திருவருள் கிடைக்கும் என்பதையும் திடமாகச் சொல்ல இயலாது. வயலில் உழுகிறவன் வயலை உழுது புழுதியாக்கி வரம்பு கோலிக்கொண்டு மடையை எதிர்நோக்கி இருக்கிறான். ஆனால், மழை பெய்விக்க அவனால் இயலாது. அதுபோல, நாம் நம்மைப் பக்குவப்படுத்தித் திருவருளை எதிர்நோக்கி இருக்கலாமேயன்றி, திருவருளைப் பெறுதல் நம்முடைய புத்தி பூர்வமான ஆற்றலுக்கு அடங்காது என்று சாத்திரம் சொல்லும். ஆதலால் இப்படி நடந்துதான் திருவருள் பெற வேண்டும் என்றும் சொல்ல முடியாது. வந்திக்குத் திருவருள் கைகூடியதுபோல, யாருக்கும் எந்த நேரத்திலும் எவ்விதக் காரணம் இல்லாமலும் இறைவனது அருள் நோக்கம் வந்து பொருந்தலாம். எனவே, உலகோர் அனைவரும் எப்போதும் தன்னைத் தூய்மையானவர்களாகக் ஆக்கிக்கொண்டு அன்பின் வழியில் அறிவுக்கண் கொண்டு வாழ்க்கையை நடத்திச் செல்லும்போது அனைவரும் நல்ல நிலையை அடைவர் என்பதை அறியலாம்.

**நிறைவுரை**

இதுகாறும் சைவ சமயம் பற்றிய விளக்கம், அதன் தொன்மை, சைவசமய ஆய்வு நூல்கள், சமயமும் பயனும், சைவ சமயக் கோட்பாடுகள், பதி பசு பாசங்களின் இலக்கணங்கள், ஐந்தொழில்களின் பொருள், சிவ சத்தியின் தன்மை, தசகாரிய விளக்கம், முத்தி இலக்கணம், முத்தி சாதனம், திருவருள் நிலை, அது மானுட மக்களுக்குக் கிடைக்கும் வகை என்பன குறித்து இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உலகில் உள்ள சமயங்கள் பலவற்றில் சைவ சமயம் தொன்மை வாய்ந்ததாக உள்ளது.

உயிரானது பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பதியாகிய இறைவனை அடையும் வழிகளைக் கூறுவதில்தான் சமய வேறுபாடுகள் எழுகின்றன. வெளிப்படுத்தும் முறைகளில் வேறுபாடுகள் இருப்பினும் அவற்றின் சாரத்தில் ஒற்றுமை உள்ளதை அறியலாம். ஒவ்வொரு வீட்டிலும் சமையல் செய்யும் முறையில் வேறுபாடுகள் இருப்பினும் சமைக்கப்படுவதன் நோக்கம் பசியாற்றுவித்தல் என்பதுதானே! அதுபோன்றுதான், சமயங்கள் பலவாக இருந்தாலும் அனைவரும் சமமே என்பதும் அறிதற்குரியதாகும். அன்பே சிவம் என்பதும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும், பிறப்பினால் எவர்க்கும் பெருமை வராதப்பா - உலகில் சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா என்றெல்லாம் குறிப்பிடப்படுவதும் தமிழ் மரபின் உலகப் பொதுமைச் சிந்தனைகள் அல்லவா! சைவ சமயமும் உலகப் பொதுமையையே பேசுவதை அறியலாம். வாழ்க்கைப் பற்றிய முழுப்பார்வையும் தெளிவும் கொண்டதாக சைவ சமயம் விளங்குகிறது என்பதும் பெறப்படுகிறது.

சைவ சமயம் பற்றிய விளக்கத்தை ஒரு நூலுள் சொல்லுதல் என்பதே அரிது என்ற நிலையில் சைவ சமயம் பற்றிய அறிமுகத்தை அறிய விரும்புவோர்க்கு அறிவித்தலே நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது. சைவ சமயத்தைப் பற்றி மேலும் விரிவான செய்திகளை அறிய எண்ணுவோரும் சைவ சமயத்தின்வழி வாழ்க்கையை ஈடேற்றம் செய்ய நினைப்போரும் சைவசமயம் சார் நூல்களை முறைவழியே பயின்று, தக்கோர் துணைகொண்டு தெளிந்து பயன்பெறுவீர்களாக! இறையருளும் குருவருளும் அனைவருக்கும் துணை நிற்குமாக!! நலமே சூழ்க!!!

## References

[1] அருணாசலம்.மு, சைவ சமயம், மாணிக்கம் பிரஸ், சென்னை-29, முதற்பதிப்பு: அக்டோபர், 1969.
[2] இராசமாணிக்கனார்.மா, சைவ சமய வளர்ச்சி, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, மூன்றாம் பதிப்பு: டிசம்பர், 1999.
[3] யோகா தோற்றமும் வளர்ச்சியும் தற்கால யோகாவின் பயன்பாட்டு முறைகளும், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட் 2011.
[4] Flood, Gavin (1996). An Introduction to Hinduism. Cambridge: Cambridge University Press. பன்னாட்டுத் தரப்புத்தக எண் 0-521-43878-0.
[5] Tood M.Johnson and Brian J.Grim. (2013), The World's Religions in Figures: An Introduction to International Religious Demography, First Edition, John Wiley & Sons Ltd.